1971 டிசம்பர் 4]

(இ) ஆம் எனில், அந்த இடத்தை எந்தக் காரியத்திற்கு பயன்படுத்த அரசு எண்ணியுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது சம்பந்தமாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று சொல்லப்பட்டால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அது அடைகிறது. அந்த அளவிற்கு அவையின் நேரத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறதே தவிர, அந்த உறுப்பினரின் தன்மையைப் பார்ப்பதாக, குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவையில் நல்ல முறையில் பணிகள் நடைபெற வேண்டுமென்றுதான் இந்த முறை மேற்கொள்ளப்படுகிறது. அடுத்து, வினா எண் 85.

திருப்பூரைச் சுற்றிலும் வட்டச்சாலை

*85 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரைச் சுற்றி வட்ட வடிவமான ரோடு அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரத்திலிருக்கும் திருச்சி செல்லும் பாதை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி செல்லும் பாதை, பல்லடம் செல்லும் பாதை எல்லாம் ஒரேயிடத்தில் சந்திக்கும் நிலை இருப்பதால் லாரி போக்கு வரத்து அதிகமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க வட்டவடிவமான ரோடு அமைக்க பரிசீலிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போது அது போன்ற திட்டம் ஒன்றும் இல்லை.

காட்பாடியிலுள்ள இரயில்வே மேம்பாலம்

*86 வினா.—**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடி இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்த, மத்திய அரசுக்கு, மாநில அரசு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பரிசீலிக்கப்படும்.